Volume: 07 Issue: 03 July to September 2025 www.irjtsjournal.org

# புறநானூற்றில் இசைக் கலைஞர்களின் வாழ்வியல்

கு. சங்கவி
*முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர்*
*ஒப்பிலக்கியத் துறை, தமிழியற்புலம்*
*மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை 21.*

**முன்னுரை**

சங்க கால தமிழர்கள் இசை சிற்பம் ஓவியம் கட்டிடம் நாட்டியம் உள்ளிட்ட பல்வேறு கலைகளை அறிந்திருந்தனர். இவற்றுள் தனிச் சிறப்பு பெற்றனவாக இசைக்கலை சிறந்த விளங்கியது. இசைக்கலையில் சிறந்த கலைஞர்களான பாணர் கூத்தர் விறலியர் பாடினி பொருநர் உள்ளிட்ட கலைஞர்கள். வாழ்க்கை கலை சிறப்பு நம்பிக்கைகள் உணவுமுறை போர் சிறப்பு கல்வி கலைஞர்களின் சமுதாயநிலை பரிசில் பெறுதல் புறநானூறு வாழ்வியல் ஆகியவற்றை இக்கட்டுரையில் காண்போம்.

**புறநானூறு வாழ்வியல்**

புழந்தமிழில் உள்ள தொகை நூல்களில் ஈடு இணையற்ற நூல் புறநானூறு ஆகும். இந்நூல் பண்டைத் தமிழ் மக்களின் ஒழுகலாறுகளையும் பழக்க வழக்கங்களையும் பண்பாட்டுச் சிறப்புகளையும் நாகரிக மேம்பாட்டையும் தொழில் முறைகளையும் மக்களின் வாழ்க்கை நிலைகளையும் அறிய உதவும் அரிய களஞ்சியமாக விளங்கிறது. அரசர்களே புலவராக விளக்கியமையும் அரசருக்கே புலவர்கள் அறிவுரைக் கூறுபவராக விளங்கியதைப் பற்றியும் குறிப்பிடுகிறது.

**கலை**

மனிதனது உள்ளத்தைத் தன் வயமாக்கி நிரம்பி அவ்வளவோடு நில்லாமல் வெளிப்படும் ஆற்றலே கலை. கூடுதல் குறைதல் இன்றி எப்பொருளும் அளவோடுஅமைந்திருப்பின் அந்த அமைப்புக் கண்ணைக் கவருது இயல்பு. கண்ணையும் கருத்தையும் கவரும் அந்த அமைப்புப் பாராட்டத்தகும் நிலையை அடைகின்றது. அப்பொருள் கலையறிவோடு அமைக்கப்பட்டது. கலை என்பது அளவும் பொருத்தமும் தன்னுள் அடக்கி நிர்பதும் அதே சமயத்தில் உள்ளத்திற்கு உவகை ஊட்டுவது கலையாகும்.

**கலைஞர்கள்**

கலை மிகவும் ஆழமான பொருளைக் கொண்டது. மனிதனின் பொழுது போக்கிற்காக மட்டும் பயன்படாமல் அடிப்படையில் மனிதனின் மனத்தில் புதைந்திருக்கும் உணர்வுகளையும் அழியாத உண்மையின் தத்துவத்தையும் வெளிப்படுத்துவதே கலையின் பணியாகும். கலையை படைப்பவன் கலைஞனாகிறான். கலைஞனுக்கு வயது அனுபவம் கிடையாது. ஒவ்வொரு மனிதனும் தன்னுடைய படைப்பை வெளிப்படுத்தும் போது கலைஞராகிறான்.

சங்க காலத்தில் கலைஞர்களாக விளங்கிய பாணர் கூத்தர் விறலியர் பாடினி பொருநர் கற்றத்தினரின். கலைப்படைப்பு மக்களிடமும் மன்னர்களிடமும் மதிப்பு பெற்றிருந்தது. பொன்னும்பொருளும் கொடுத்து ஆதரித்தாலும் சமுதாயத்தில் அவர்களும் ஒருவராக ஏற்றுக் கொள்ளப்படாமல் பிறரை அண்டி வாழும் நிலையை அடைந்தனர். தங்களுக்கென்று நிலையான இடம் இல்லாமல் ஊர் ஊராகத்திரியும் நாடோடியினர் போல இவர்களது வாழ்க்கை அமைந்திருந்தது. சங்க காலத்திற்குப் பின்பு வந்த காலங்களில் கலைகளின் வகுப்பு வளர்ச்சியடைந்தது. தொல்காப்பியத்தில் பாடல் வரிகள்.

**“கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும்**

**ஆற்றிடைக் காட்சி உறழத் தோன்றிப்”**[1] (தொல் - 63)

**இசைக்கலை**

இசை தமிழ் என்றும் கூறுவர். இது காதினால் கேட்டு இன்புறத்தக்க இன்கலை. தமிழர் வளர்த்த இயல் இசை நாடகம் என்னும் முத்தமிழர்களில் இது ஒன்று ஆகவே இது தமிழர் வளர்த்த கலைகளில் மிகப் பழைமையானது.

இசைத்தமிழ் இலக்கிய நூல்களையும் இசை தமிழ் இலக்கண நூல்களையும் புலவர்கள் பழங் காலத்திலே எழுதியிருந்தார்கள். அவற்றில் சில இப்போது பெயர் தெரியாமலே மறைந்துவிட்டன. பண்டைக்

*இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு ஆவார்*

© 2025, IRJTSR

காலத்தில் தமிழ் நாட்டில் இசைக் கலையில் வல்லவராயிருந்தவர் பாணர் என்னும் இனத்தவர். சங்க காலத்திலே பாணர்கள் அரசர் சிற்றரசர் செல்வர் முதலியவர் இல்லங்களுக்குச் சென்று இசைப்பாடல் பாடினர்.

**“பின்வழி நின்றது முழவே முடிவொடு**

**கூடி நின்று இசைத்தது ஆமந்திரிகை”[2](சிலம் - 140)**

இனி இசையைப் பற்றிச் சில செய்திகளைக் கூறுவோம். இசை ஏழு அவை குரல் துத்தம் கைக்கிளை உழை இளி விளரி தாரம் என்பன. இவை தமிழ்ப் பெயர்கள் மத்திமம் பஞ்சமம் தைவதம் நிஷாதம் ஷட்ஜமம் ரிஷபம் காந்தாரம்” என்பன வட மொழிப் பெயர்கள் இசைப் பெயர்களைக் காணமுடிகிறது.

**கலைஞர்களின் வாழ்க்கை**

சங்க காலத்தில் கலைத்திறன் மிக்க கலைஞர்கள் குழுக்களாக வாழ்ந்து வந்தனர்.அக்குழுவில் கூத்தர் பாணர் பொருநர் என்ற ஆண்பாற் கலைஞர்களும விறலி என்னும் பெண் கலைஞரும் இருந்துள்ளனர்.

**பாணர்கள்**

இசைப்பாணர்கள் தன்முடைய இனிய குரலால் கேட்போர் மயங்குமாறு பாடுவதில் திறமை பெற்றிருந்தனர். இவர்கள் வாழ்க்கை நிலையாக ஓரிடத்தில் அமையாமல் நாடோடி.

**“களங்னி அன்ன கருங்கோட்டுச் சறியாழ்ப்**

**பாடுஇன பறுவல் பாணர் உய்ததெனக் களிறு.”[3](புறம் - 127)**

என்று புறநானூறு வெளிப்படுத்துகிறது.

**விறலியர்**

பாணர் குலத்தில் பிறந்த பிரிவினருள் விறலியும் ஓருவர். விறல் என்னும் சொல் வெற்றியைக் குறிக்கும் சொல்லாகும். மன்னரின் வெற்றியைப் புகழ்ந்து பாடுவதும் தன்னுடைய உள்ளக்குறிப்பை விரல்களின் மூலம் வெளிப்படுத்துவதும் இவரியல்பாதலால் விறலி என அழைக்கப்பட்டாள். சங்க இலக்கியம் விறலியை இசையோடும் ஆடலோடும் தொடர்புடையவளாக 42 இடங்களில் பதிவு செய்துள்ளது. பாணர் குலத்தில் பிறந்த விறலியும் பாடினியும் ஒருவரே என்ற கருத்து நிலவுகிறது. பாடும் இயல்பையும் ஆடும் இயல்பையும் உடையவள்.

**“கடவது அறிந்த இன்குரல் விறலியர்”[4] (மலைபடு – 535)**

மருதப்பண்ணை வாசித்த கரிய கொம்பினையுடைய சிறிய யாழ் இவற்றோடு இணைந்து தம் நரம்போசை கடவாது இசைக்க செய்வதை அறிந்த இனிய குரலையுடைய விறலியர்.

**பொருநர்**

பொருநரும் பாணரைப் போன்று இசை மரபைச் சார்ந்தவராவர். சங்க இலக்கியத்தில் பொருநன் என்ற வரன் அரசன் கூத்துக் கலைஞன் என்ற பல் பொருளில் பயன்படுத்தப்பட்டுள்ளது. **நாஞ்சில் பொநன்”இ” நல்நாட்டுப் பொருநன்**” என்று அரசனைக் குறிக்கவும். **கொல்லிப் பொருநன்**” தொண்டிப் பொருநன் என்ற தலைவனைக் குறிக்கவும் பகைவன் என்ற பொருளைக் குறிக்கவும் பொருளினைக் குறிக்கவும் பொருநர் என்ற சொல் கையாளப்பட்டது. பொருநரை ஏர்க்களம் பாடும் பொருநர் போர்க்களம் பாடும் பொருநர் என்று வகைப்படுத்தலாம். சங்க இலக்கியத்தில் குறிக்கப்படும்.

**“வேறு புலம் முன்னிய விரகு அறி பொருங்”[5] (பொரு – 3)**

பொருநர் கழகப் பகுதியில் உள்ள சிறியதும் வெள்ளை நிறத்ததும் ஆகிய உப்பை விலை சொல்லி மலைநாட்டில் விற்பர். அத்தகைய சிறப்பைப் பெற்றவர்கள்.

**பாடினி**

பாடினி என்பவள் பாடும் தொழிலை மேற்கொண்டவள். பாணனுடன் மன்னர்களைக் காணக் சென்று கலையை வெளிப்படுத்துவளாக பாடினி விளங்கினாள். பாணன் என்பதற்குப் பெண்பாற் சொல்லாகப் பாடினி என்றும் பாட்டியர் என்றும் இலக்கியத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. முன்னூறு ஊர்களை உடைய பறம் நாடு நன்னாட்டை பெறுவதற்கு பாரியை புகழ்ந்துப் பாட வேண்டும்.

*இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு ஆவார்*

© 2025, IRJTSR 

**"குன்றும் உண்டும் - நர் பாடினிர் செலினே"[6](புறம் - 110)**

நல்ல யாழின் தண்டினால் மெதுவாக வளைத்துப் பாணனும் சூடமாட்டான் பாடினியும் அணிந்து கொள்ள மாட்டாள்.

**கூத்தர்**

கூத்து என்பது பலர் ஆடக்கூடிய குழு ஆடக் கூடியவர்களுக்குத் தலைவராக இருந்திருக்க வேண்டும். கூத்துக் தொழிலால் பெயர் பெற்ற கூத்தர்" என்ற சொல் சங்க இலக்கியத்தில் ஓர் இடத்தில் மட்டுமே பதிவு செய்யப்பட்டுள்ளது. வள்ளுவர் கூறியது

**"கூத்தாட்டு அவைக்குழாத் தற்றே செல்வம்**

**போக்கும் அதுவிளிந்தற்று"[7](குறம் -332)**

கூத்தரங்குகளில் நிகழ்ச்சிகள் நடைபெறும் போது கூட்டம் கூடி நிகழ்ச்சி முடிந்தவுடன் கலைந்து சென்று விடுவதைப் போல்பெருஞ்செல்வமும் வருவது போலவே சென்றுவிடும்.

**கலைஞர்களின் உணவு முறை**

தொல்காப்பியம் பத்துப்பாட்டு எட்டுத்தொகை என அமையும் சங்க நூற்களில் உணவு முறை பற்றிய பல்வேறு குறிப்புகள் வருணனைகளாகவும் உவமைகளாகவும் பாடல்களில் கூறப்பட்டுள்ளன. கவிதை போன்ற குறிப்புகள் முழுவதுமாக எதிர்பார்க்க இயலாது எனினும் இலக்கியம் என்பது சமூக வாழ்வை விவரிக்கும் போக்குடையதால் அதிலும் குறிப்பாக நாகரிகம் வாய்ந்த சங்க காலத்து மக்களின் வாழ்வை சங்க இலக்கியங்கள் படம்பிடித்துக் காட்டுவதால் சங்க இலக்கியங்களிலிருந்து அக்கால மக்களின் உணவு முறைகளும் பழக்கங்களும் தெளிவாகத் தெரிகின்றன.

பாண்டியர் தலைநகரான மதுரையில் ஏடைகளுக்கான உணவுச்சாலைகள் அமைக்கப் பெற்று அங்கிருந்த எளியவர்களுக்கு "பலாப்பழம் மாம்பழம் வாழைப்பழம் முந்திரிப்பழம் பாகற்காய் வாழைக்காய் வழுதுணங்காய் இனிப்புச் சுவையுடைய பண்ணியங்கள் சமைக்கப் பெற்ற கிழங்கு வகைகள் பாற்சோறு ஆகியன படைக்கப் பெற்றன."[8]– தோப்புகளில் வாழ்ந்து உழவர்கள் பலா வாழை இளநர் நுங்கு ஆகியவற்றை வழிநடை செல்லும் பாணர்க்கு அளித்து விருந்தோம்பினர்.

**நம்பிக்கைகள்**

இன்க குழு மக்களிடையே மேற்கொள்ளப்படும் சடங்குகள் அனைத்தும் நம்பிக்கையின் வழியே நடத்தினர். ஆநிரையைக் கவரச் சென்ற வரர் கூட்டத்தினர் தாங்கள் எய்த அம்பு குறி தவறுவதற்கு அங்குள்ள வேப்பமரத்திலுள்ள கடவுளின் கோபம் என் நினைத்தார். இதனால் வில்லையும் அம்பையும் போருக்கு கொண்டு செல்வதைத் தவிர்த்து வாளை எடுத்துச் சென்று வெற்றி பெற்றனர். வேப்ப மரத்திலுள்ள கடவுளின் கோபத்தைத் தணிக்க பசுவினைக் கொன்று அதன் இரத்தத்தை வேப்ப மரத்தின் மது தெளித்து இறைச்சியை சமைத்து உண்டனர்.

**"வயவாள் எறிந்து வில்லின் நக்கி**

**பயம் நிரை தழ் இய கடுங்கண் மழவர்**

**புலவுப் புழுக்கு உண்ட வாண்பண் அகல் அறை"[9] (அகம் - 309)**

என்ற அகநானூற்று வரிகளின் மூலம் வரர்கள் தாம் எய்த அம்பு குறி தவறியதற்குத் தெய்வமே காரணம் என்றும். அத்தெய்வத்திற்கு பலியிட்டுச் சடங்கு நிகழ்த்துவதன் மூலம் நன்மை ஏற்படும் என்று நம்பியதன் மூலம் இனக்குழு மக்களின் நம்பிக்கையின் வழி சடங்கு நடைபெற்றதை அறிய முடிகின்றுது.

**சமுதாயம்**

இனக்குழு சமுதாயத்தில் சிறப்புப் பாணர் நிலையானது உடைமைச் சமுதாயத்தில் மதிப்பு குறைய ஆரம்பித்தது. இக்காலக் கட்டத்தில் மன்னரைப் புகழும் வரிசையில் பாணருடன் புலவரும் சேர்த்துக் கூறப்பட்டனர். வேந்தர்கள் கலையையும் கலைஞர்களையும் ஆதரித்ததாலும் வர்க்க பேதங்கள் தோன்ற காரணமாயிருந்னர். "இதனைச் சங்க இலக்கியங்கள் தெளிவுறக் காட்டுகின்றன. இத்தைகைய தொழில் பிரிவுகளே பாணர் புலவர் போன்ற பல்வேறு பிரிவினர் தோன்றக் காரணமாக அமைந்தன"[10]– கலையை மட்டமே தொழிலாகக் கொண்ட பாணர் முதலிய பிரிவினர் ஏனைய உழைக்கும் வர்க்கத்தினரிடமிருந்து வேறுபட்டுச்



© 2025, IRJTSR 

காணப்பட்டனர். எனவே இயல்பாகவே ஆளும் மையமாக உள்ள மன்னர்களைக் கலைஞர்களும் கட்டாயக் சூழல் உடைமைச் சமுதாயத்தில் இருந்தது என்பதை அறிய முடிகின்றது.

**போர்**

போரினை மையமகாகக் கொண்டு வரயுகம் திகழ்வதால் பாட்டுடைத்தலைவனின்வீரத்தையும்

நற்பண்புகளையும் வெளிக்காட்டுவனவாக வரயுகப் பாடல்கள் அமைகின்றன. எல்லா வரநிலைக் கால பாடல்களும் முதலில் பாணர்களால் வாய் மொழியாகப் பாடப்பட்டன. பாணர்கள் போர்களத்தில் வீரர்களுக்கு ஊக்க மூட்டுபவர்களாகவும் போர்க்கள் நிகழ்வை மக்களிடம் வெளிப்படுத்துபவர்களாகவும் போர் வெற்றியை மன்னனிடம் புகழ்ந்து பாடினர்.

**“புறம் பெற்ற வயவேந்தன்**

**முறம் பாடிய பாடினியும்மே**

**ஏர் உடைய விழுக்கழஞ்சின்”[11] (புறம் - 11)**

போர்க்களத்தில் அவர்களைப் புகழவும் செய்தனர். புலவர்கள் தம் கருத்தைப் பாணர் பொருநர் கூற்றுகளாகவும் பெண்பாற் புலவர்கள் பாடினி விறலியர் பாடல்களைப் பாடினர்.

**கல்வி**

கலைஞர்கள் கலையைக் கற்று கல்வி வளர்த்தார்கள். பாணர்கள் பாடலைப் பாடிக் கொண்டு ஆடுவார்கள் போர்களத்தில் போர் வரர்களை ஊக்கப்படுத்த கலை நடைபெற்றது. பொருநர்கள் பாணரைப் போலவே தங்கள் கலையை வெளிப்படுத்தினர். கூத்தர்கள் விழா நடைபெறும் போது கூத்தர்கள் ஆடுவார்கள். பெண்பாற் புலவர்கள் விறலியர்பாடினி இவர்கள் யாழ் மட்டி பாடல் பாடுவார்கள்.

**பிற்றை நிலை முனியாது கற்றல் நன்றோ”[12] (புறம் - 183)**

**பரிசில் பெறுதல்**

பாணர்கள் தங்கள் குழுவுடனும் துணையுடனும் ஊர் ஊராகச் சென்று புரவர்களை நாடி அவர்களைப் புகழ்ந்து பாடிப் பரிசில் பெற்று வாழ்க்கை நடத்தியுள்ளனர். பாணர்களின் பரிசில் வாழ்க்கையினை இரண்டு பாணாற்றுப்படை நூல்களும் வெகுவாகச் சித்தரித்துள்ளன.

**பழுமரம் தேரும் பறவை போலக்**

**கல்லென் கற்றமொரு கால்கிளர்ந்து திரிதரும்**

**புல்லென யாக்கைப் புலவுவாய்ப் பாண”[13] (பெரும் - 20)**

**முடிவுரை**

சங்க காலத்தில் வாழ்ந்த மக்கள் இசைக்கலையில் சிறந்தவராக திகழ்ந்தன. அவர்களை இசைக் கலைஞர்கள் என்று அழைக்கப்பட்டனர். இசைக்கலைஞர்களின் கலைசிறப்புப் பற்றியும் மற்றும் கலைஞர்களின் வாழ்வியல் நிலைப் பற்றி இக்கட்டுரையில் காணமுடிகிறது.

**சான்றெண் விளக்கம்**

1. ச.சுபாஷ்சந்திரபோஸ் தொல்காப்பியம்

2. ஞா.மாணிக்கவாசகன் சிலப்பதிகாரம்

3. ச.வே.சுப்பிரமணியன் சங்க இலக்கியம் புறநானூறு

4. ச.வே. சுப்பிரமணியன் சங்க இலக்கியம் மலைபடுகடாம்

5. ச.வே. சுப்பிரமணியன் சங்க இலக்கியம் பெரும்பாண்ஆற்றுப்படை

6. ச.வே. சுப்பிரமணியன் சங்க இலக்கியம் புறநானூறு

7. ஞா.மாணிக்கவாசகன் திருக்குறள்

*இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு ஆவார்*

© 2025, IRJTSR 

8. ஆதாரம் விக்கிப்படியா

9.ச.வே. சுப்பிரமணியன் சங்க இலக்கியம் அகநானூறு

10. ஆதாரம் விக்கிப்படியா

11.ச.வே. சுப்பிரமணியன் சங்க இலக்கியம் புறநானூறு

12.மேலது

13.ச.வே. சுப்பிரமணியன் சங்க இலக்கியம் பெரும்பாண்ஆற்றுப்படை

**பார்வை நூல்**

1. சுபாஷ்சந்திரபோஸ் தொல்காப்பியம் நியூ செஞ்சரி புக்

2. ஞா.மாணிக்கவாசகன் சிலப்பதிகாரம் உமா பதிப்பகம் சென்னை 600 001.

3. ச.வே.சுப்பிரமணியன் சங்க இலக்கியம் புறநானூறு மணிவாசகர் பதிப்பகம் சென்னை 600 108.

4..ச.வே.சுப்பிரமணியன் சங்க இலக்கியம் மலைபடுகடாம் மணிவாசகர் பதிப்பகம் சென்னை 600 108.

5. ..ச.வே.சுப்பிரமணியன் சங்க இலக்கியம் பெரும்பாண்ஆற்றுப்படை மணிவாசகர் பதிப்பகம் சென்னை 600 108.

6.ஞா.மாணிக்கவாசகன் திருக்குறள் உமா பதிப்பகம் சென்னை 600 001

7. ..ச.வே.சுப்பிரமணியன் சங்க இலக்கியம் அகநானூறு மணிவாசகர் பதிப்பகம் சென்னை 600 108.

*இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு ஆவார்*

© 2025, IRJTSR